அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சமவாய்ப்பு பிரிவு

| எண்- எச்-1-5/2025-2026 | நாள்:- 01-09-2025 |
|---|---|

**சுற்றறிக்கை**

பொருள்: பல்கலைக்கழக ஆராய்ச்சி உதவித்தொகை 2025-2026ஆம் ஆண்டிற்குரிய விண்ணப்பபடிவங்கள் அனுப்புதல் – தொடர்பாக

******

பல்கலைக்கழகத்தில் அனைத்து துறைகளில் முழு நேர ஆராய்ச்சி கல்வி பயின்று வரும் மாணவ மாணவியர்களில் தகுதியுடையோருக்கு 2025-2026ஆம் கல்வியாண்டில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பல்கலைக்கழக நிதியிலிருந்து ஆராய்ச்சி உதவித்தொகையாக மாதம் ரூபாய் 2000/மும் சில்லரை செலவினங்களுக்காக ஒரு ஆண்டிற்கு ரூபாய்.2000/-மும் வழங்கப்படவுள்ளது. இந்த உதவித்தொகை பெற விரும்புவோர் அதற்குரிய விண்ணப்பத்தை "எச்" பிரிவிலிருந்து பெற்று 08-09-2025 முதல் துறைத்தலைவர் மூலமாக விண்ணப்பிக்கலாம்.

பல்கலைக்கழக ஆராய்ச்சி உதவித்தொகை பெறுவதற்கு கீழ்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படுகிறது.

1. இளமுனைவர் (M.Phil) பட்டயம் பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
2. இவ்உதவித்தொகையினை முழுநேர ஆராய்ச்சி மாணவர்கள் மட்டுமே பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள் மேலும் எந்த உதவித்தொகையும் பெறாதவர்கள் இவ்உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம் புல முதல்வர்கள் குழு பரிந்துரைக்கும் ஆராய்ச்சி மாணவர்களின் பெயர்களை, துணைவேந்தர் அவர்கள் உறுதி செய்யும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
3. ஒருமுறை உதவித்தொகை பெற்றவர்கள் மறு ஆண்டு புதுப்பித்தல் இயலாது.

மாணவர்களிடமிருந்து பெற்ற விண்ணப்பங்களை பரிசீலித்து அவர்கள் தம் ஆய்வின் முனேற்றத்தினையும் நன்னடத்தையும் கணக்கில் கொண்டு ஆராய்ச்சி உதவித்தொகை பெற தகுதியுள்ள மாணவர்களது பட்டியலை மூப்பு அடிப்படையில் அனுப்பிட வேண்டப்படுகிறது

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து படிவம் இரண்டில் உள்ள விபரங்களுடன் புல முதன்மையர் வாயிலாக பரிந்துரை செய்யப்பட்டு 29-09-2025க்குள் இவ்வலுவலக "எச்" பிரிவில் சேர்ப்பிக்க வேண்டுமாறு தெரிவிக்கப்படுகிறது.

பதிவாளர்

பெறுநர்

அனைத்து புல முதல்வர்கள்,
அனைத்து துறைத்தலைவர்கள்
இயக்குநர், எண்ணியல் தகவல் மையம்
இயக்குநர், கல்வியியல் ஆராய்ச்சி இயக்ககம்
விடுதி காப்பாளர் பொதிகை இல்லம்

நகல்

துணைவேந்தர் நேர்முக செயலர்
பதிவாளர் நேர்முக உதவியாளர்